## April 29, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ரஷியாவிடம் இருந்து எஸ்-400 வான் பாதுகாப்பு அமைப்பின் நான்காவது தொகுதியை இந்தியா அடுத்த மாதம் பெற உள்ளது.

(i) கடந்த 2018-ஆம் ஆண்டு அக்டோபரில், தரையில் இருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் மிகவும் அதிநவீன எஸ்-400 ட்ரையம்ஃப் வான் பாதுகாப்பு அமைப்பை கொள்முதல் செய்வதற்கு ரஷியாவுடன் 5 பில்லியன் டாலர் (சுமார் ரூ.47,000 கோடி) ஒப்பந்தத்தில் இந்தியா கையொப்பமிட்டது.

(ii) இந்த ஒப்பந்தத்தின் கீழ், 5 தொகுதிகளாக எஸ்-400 வான் பாதுகாப்பு அமைப்பை கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டது. அதில் ஏற்கெனவே 3 தொகுதிகளை இந்தியாவிடம் ரஷியா ஒப்படைத்துவிட்டது.

(iii) இதைத்தொடர்ந்து அந்த வான் பாதுகாப்பு அமைப்பின் 4-ஆவது தொகுதியை அடுத்த மாத (மே) தொடக்கத்தில் இந்தியாவிடம் ரஷியா ஒப்படைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அவை கடல் வழியாக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அடுத்த சில நாள்களில் இந்தியாவுக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(iv) எஸ்-400 வான் பாதுகாப்பு அமைப்பின் 5-ஆவது தொகுதி நிகழாண்டு நவம்பர் மாதம் இந்தியாவிடம் அளிக்கப்படும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(v) இத்துடன் புதிதாகமேலும் ஐந்து எஸ்-400 அமைப்புகளை ரஷியாவிடம் இருந்து கொள்முதல் செய்வதற்கு கடந்த மாதம் மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இந்த ஐந்து எஸ்-400 வான் பாதுகாப்பு அமைப்புகளையும் சேர்த்தால், ரஷியாவிடம் இருந்து இந்தியாவுக்கு மொத்தம் பத்து எஸ்-400 வான் பாதுகாப்பு அமைப்புகள் கிடைக்கும்.

(vi) கடந்த ஆண்டு மே 7 முதல் மே 10-ஆம் தேதிவரை, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் கீழ், பாகிஸ்தானுடன் இந்தியா ராணுவ மோதலில் ஈடுபட்டபோது எஸ்-400 இந்தியப் பகுதிகளை ஏவுகணைத் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதில் முக்கியபங்காற்றியது.

2. உலகளாவிய கச்சா எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பிலிருந்து (ஒபெக்) வரும் மே 1 முதல் விலகுவதாக ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) அறிவித்தது.

(i) அபுதாபி வாயிலாக கடந்த 1967-இல் இந்த அமைப்பில் இணைந்த ஐக்கிய அரபு அமீரகம், பின்னர் 1971-இல் தனி நாடாக உருவெடுத்த பிறகும் தொடர்ந்து உறுப்பினராக நீடித்து வந்தது; சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலான உறவை தற்போது முறித்துக் கொண்டுள்ளது.

(ii) புவிசார் அரசியல் சூழல் மற்றும் உற்பத்தி ஒதுக்கீடு தொடர்பாக ஏற்கெனவே பல முரண்பாடுகளைக் கொண்டுள்ள ஒபெக் அமைப்பை, அதன் நீண்ட கால உறுப்பினரான ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளியேற்றம் மேலும் பலவீனப்படுத்தும் என்று பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

(iii) இது தொடர்பாக ஐக்கிய அரபு அமீரக எரிசக்தி அமைச்சர் சுஹைல் முகமது அல்-மஸ்ரூயி மேலும் கூறுகையில், 'நாட்டின் தற்போதைய மற்றும் எதிர்கால எரிசக்தி உத்திகளைத் தீவிரமாகப் பரிசீலித்த பிறகே இக்கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஒபெக் அமைப்பின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் சவூதி அரேபியாவிடம் இந்த விலகல் தொடர்பாக எந்த ஆலோசனையும் நடத்தப்பட வில்லை' என்றார்.

(iv) சவூதி அரேபியாவின் இளவரசர் முகமது பின் சல்மானின் நேரடித் தலையீட்டின்கீழ், அந்நாடு அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் ஐக்கிய அரபு அமீரகத்துக்குப் போட்டியாகச் செயல்படத் தொடங்கியது.

(v) அதேபோல், யேமன் உள்நாட்டுப் போரில் ஈரான் ஆதரவு ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவூதி, ஐக்கிய அரபு அமீரகப் படைகள் இணைந்து செயல்பட்டன. இருப்பினும், ஐக்கிய அரபு அமீரக ஆதரவு பெற்ற பிரிவினைவாதிகளின் ஆயுதக் கிடங்குகளைச் சவூதி அரேபியா கடந்த டிசம்பரில் குண்டுவீசித் தகர்த்தது.

(vi) இவ்வாறு, இரு நாடுகளுக்கும் இடையே பிராந்திய அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக நிலவி வரும் கடும் போட்டியின் உச்சகட்டமாகவே, ஒபெக் அமைப்பிலிருந்து ஐக்கிய அரபு அமீரகத்தின் இந்த வெளியேற்றம் பார்க்கப்படுகிறது.

(vii) மேலும், எண்ணெய் உற்பத்தியைக் குறைக்க வேண்டுமென ஒபெக் அமைப்பின் நிபந்தனைகள் ஐக்கிய அரபு அமீரகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக அமைந்ததும் இம்முடிவுக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

(viii) ஒபெக் அமைப்பிலிருந்து வெளியேறிய போதிலும், சர்வதேச சந்தையின் தேவையைக் கருத்தில் கொண்டு, படிப்படியாகவும் முறையான அளவிலும் கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய அரபு அமீரகம் தெளிவுபடுத்தியுள்ளது. இதன்மூலம், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விநியோகத்தில் சமநிலையைப் பேணப்போவதாக அந்நாடு உறுதியளித்துள்ளது.

3. 1970–ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்வதற்கான 11-ஆவது ஐ.நா. மாநாடு நியூயார்க்கில் தொடங்கியது.

(i) இந்த மாநாட்டுக்கு வியத்நாம் தலைமை வகிக்கும் நிலையில், அணிசேரா நாடுகளின் குழு சார்பில், மாநாட்டின் 34 துணைத் தலைவர்களில் ஒருவராக ஈரான் பரிந்துரைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டது.

(ii) இந்த நியமனத்துக்கு கண்டனம் தெரிவித்த அமெரிக்கா, சர்வதேச அணுசக்தி முகமைக்கு ஒத்துழைக்க மறுத்து, அணுசக்தி விதிகளை ஈரான் மீறி வருவதாக குற்றஞ்சாட்டியது.

(iii) இதற்குப் பதிலடி கொடுத்த ஈரான் தூதர் ரெசா நஜாபி, 'அணு ஆயுதக் கிடங்கைத் தொடர்ந்து நவீனப்படுத்தி வரும் அமெரிக்காவுக்கு, மற்ற நாடுகளின் இணக்கம் குறித்துப் பேச தார்மீக உரிமை இல்லை' என்றார்.

4. மாரத்தானில் உலக சாதனை நேரத்தை எட்டுவதற்கு முன்பு, மிகக் கடுமையான ஊக்கமருந்து பரிசோதனை கட்டுப்பாடுகளுக்கு தன்னை ஆட்படுத்திக்கொண்டதாக, கென்ய ஓட்டப்பந்தய வீரர் செபாஸ்டியன் சாவே தெரிவித்தார்.

(i) சுமார் 42 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட மாரத்தான் பந்தயத்தை 2 மணி நேரத்துக்கு உள்ளாக கடப்பதென்பது, எட்ட முடியாத ஒன்றாக பல ஆண்டுகளாக விவாதிக்கப்பட்டு வருகிறது. கென்ய வீரர் கெல்வின் கிப்டம் 2023-இல் 2 மணிநேரம், 35 விநாடிகளில் இலக்கை அடைந்ததே சாதனையாக இருந்தது.

(ii) இந்நிலையில், லண்டனில் நடைபெற்ற மாரத்தான் போட்டியில் செபாஸ்டியன் சாவே, 2 மணிநேரத்துக்குள் மாரத்தானை நிறைவு செய்த முதல் போட்டியாளராக புதிய உலக சாதனை படைத்தார். பந்தய இலக்கை அவர், 1 மணிநேரம், 59.30 நிமிஷங்களில்

அடைந்தார்.

5. ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் அருகே ரூ.1.35 லட்சம் கோடியில் அமையவுள்ள கூகுள் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தரவு மையத்துக்கு அந்த மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில் மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கலந்து கொண்டார்.

(i) தர்லுவாடா, அடவிவாரம் (விசாகப்பட்டினம்) மற்றும் ரம்பிலி (அனகாபள்ளி) ஆகிய கிராமங்களில் 600 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள 1 ஜிகாவாட் திறன் கொண்ட கூகுள் ஏஐ தரவு மையம் இந்திய எண்ம உள்கட்டமைப்புத் துறை வளர்ச்சியில் ஓர் மைல்கல்லாக கபார்க்கப்படுகிறது.

(ii) இதன் அடிக்கல் நாட்டு விழாவில் சந்திரபாபு நாயுடு பேசியதாவது:

- காலங்கள் கடந்து இந்திய மற்றும் ஆந்திர மக்களால் நினைவுகூரப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நாளாக ஏப்.28, 2026 மாறியுள்ளது.இந்தியாவின் வளர்ச்சிக்கு கூகுள் ஏஐ தரவு மையம் பெரும் பங்காற்றவுள்ளது. இது சாதாரண தரவு மையம் அல்ல; நமது மாநிலத்தின் எண்ம எதிர்காலத்துக்கான அடித்தளம்.
- ரூ.1.35 லட்சம் கோடியில் ஆசியாவில் மிகப்பெரும் தரவு மையமாக இது அமையவுள்ளது. உலகமே கூகுளில் தேடிக் கொண்டிருந்த போது ஆந்திரத்தை அந்நிறுவனம் தேர்ந்தெடுத்துள்ளது. இதுவே நமது மாநிலத்தின் பெருமை.

6. நாடுகளின் ஆதரவுடனான எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கவனத்தில் கொள்வதை ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) தவறக்கூடாது. பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் இரட்டை நிலைப்பாடு கூடாது' என்று இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

(i) கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கேக்கில் நடைபெற்ற எஸ்சிஓ மாநாட்டில் பங்கேற்று பேசியபோது, எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் பாகிஸ்தானை நேரடியாகக் குறிப்பிட்டு, இக்கருத்தை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

(ii) கிர்கிஸ்தானின் பிஷ்கேக் நகரில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டுக்கு இடையே சீன பாதுகாப்புத் துறை அமைச்சர் டோங் ஜுன்னுடன் ராஜ்நாத் சிங் ஆலோசனை மேற்கொண்டார்.

(iii) 2001-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட எஸ்சிஓ அமைப்பில் பெலாரஸ், சீனா, இந்தியா, ஈரான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷியா, தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

7. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு வரும் ஜூன் 1-ஆம் தேதி தொடங்குகிறது. அப்போது 33 விவரங்கள் சேகரிக்கப்படும். தவறான தகவல் அளிப்போருக்கு ரூ.1,000 அபராதம் விதிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் அ.கு லோத்துங்கன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் செவ்வாய்க் கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

- புதுச்சேரி அரசு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மூலம் கடந்த 25-ஆம் தேதி வெளியிடப்பட்ட அரசாணையின் அடிப்படையில், இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு செயல்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுக்க பொதுமக்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

- மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும். இந்தத் தரவுகள் தேசிய திட்டமிடல், கொள்கை வடிவமைப்பு மற்றும் நாடாளுமன்றம், சட்டப்பேரவை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுதி வரையறை மற்றும் ஒதுக்கீடு போன்ற செயல்பாடுகளில் முக்கிய பங்காற்றுகின்றன. மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027-இல் முதல் கட்டமாக வீட்டுபட்டியல் மற்றும் வீட்டு கணக்கெடுப்பு புதுவை யூனியன் பிரதேசத்தில் அட்டவணைப்படி நடைபெறும். பொதுமக்கள் தாங்களே இணையதளத்தின் மூலம் தகவல்களைப் பதிவுசெய்யும் சுய கணக்கெடுப்பு வரும் மே 17-ஆம் தேதி முதல் 31-ஆம் தேதி வரை நடைபெறும்.
- கணக்கெடுப்பு அலுவலர்கள் வீடுகள்தோறும் சென்று தகவல்களைச் சேகரிக்கும் பணி ஜூன் 1-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை மேற்கொள்ளப்படும். இந்தக் கணக்கெடுப்பின்போது வீட்டு அமைப்பு, குடிநீர் வசதி, கழிப்பறை, சமையல் எரிபொருள், மின்சாரம் மற்றும் இணைய வசதி உள்ளிட்ட மொத்தம் 33 விவரங்கள் சேகரிக்கப்படும்.

(i) துல்லிய தகவல்:

- மக்கள் தொகைக் கணக்கெடுப்பு சட்டம் 1948-இன் படி, பொதுமக்கள் சில முக்கிய சட்டபூர்வ கடமைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். கணக்கெடுப்பு அலுவலர்கள் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையான மற்றும் துல்லியமான பதில்களை வழங்குவது கட்டாயமாகும். வீடுகளில் கணக்கெடுப்பு அலுவலர்கள் பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.
- தேவையானபோது, கணக்கெடுப்பு படிவங்களைச் சரியாக நிரப்பி ஒப்படைக்க வேண்டும். கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் அனைத்து தகவல்களும் முழுமையான ரகசியத்துடன் பாதுகாக்கப்படும். எந்த வழக்குகளிலும் இந்தத் தகவல்கள் சான்றாக பயன்படுத் தப்படமாட்டாது என உறுதியாக அறிவிக்கப்படுகிறது.
- கணக்கெடுப்பு பணிகளில் ஒத்துழைக்காமல் இருப்பது, தவறான தகவல் வழங்குவது அல்லது அலுவலர்களுக்கு அனுமதி மறுப்பது போன்ற செயல்கள் சட்டப் படி குற்றமாகும். இத்தகைய விதி மீறல்களுக்கு ரூ.1,000 வரை அபராதம் விதிக்கப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. 2026-ஆம் ஆண்டில் ஏற்பட்ட முன்னெப்போதும் இல்லாத வெப்ப அலைச் சூழல்கள் மற்றும் 'எல் நினோ' (El Niño) போன்ற அடிப்படை காலநிலை காரணிகள் குறித்த ஆய்வு

(i) 2026-ஆம் ஆண்டின் கோடைக்கால நெருக்கடி குறித்த கண்ணோட்டம்

- கோடை வெப்பத்தின் தாக்கம் முன்னெப்போதும் கண்டிராத அளவுகளுக்கு உயர்ந்துள்ளது; இது இந்தியா முழுவதையும் பாதித்துள்ளது.
- இந்த ஆண்டு கோடைக்காலம் வழக்கத்தை விட மிக முன்னதாகவே தொடங்கிவிட்டது; ஏப்ரல் மாத இறுதியில் இருந்தே கடுமையான வெப்பம் பதிவாகியுள்ளதால், வரவிருக்கும் இரண்டு மாதங்கள் குறித்த கவலை எழுந்துள்ளது.
- விதர்பா, சத்தீஸ்கர், ஒடிசா, தெலுங்கானா மற்றும் கேரளா உள்ளிட்ட மத்திய மற்றும் தென் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கடுமையான வெப்பச் சூழல்கள் காணப்படுகின்றன.
- ஆந்திரப் பிரதேசம் மற்றும் குஜராத் போன்ற மாநிலங்களில் வெப்பநிலை 40°C-ஐத் தாண்டியுள்ளது; அதேவேளையில், தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை ஏற்கனவே 100°F-ஐக் கடந்துவிட்டது.

(ii) 'எல் நினோ' (El Niño) தொடர்பான உண்மைகள்

- 'சூப்பர் எல் நினோ' (Super El Niño): தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் (NOAA), எதிர்பார்த்ததை விட முன்னதாகவே ஒரு 'எல் நினோ' நிகழ்வு உருவாகி வருவதாகக் கணித்துள்ளது. ஜூன் முதல் ஆகஸ்ட் 2026 வரையிலான காலகட்டத்தில் நிகழவுள்ள இந்த நிகழ்வு, அதிக தீவிரத்துடன் கூடிய ஒரு 'சூப்பர் எல் நினோ'வாக இருக்கும் என்று வானிலை முன்னறிவிப்புகள் தெரிவிக்கின்றன.
- காலநிலை சார்ந்த விளைவுகள்: இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் கடுமையான வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் மேலும் அதிகரிக்கும் வெப்பநிலை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கலவையான காலநிலை மாற்றங்களை இந்த நிகழ்வு ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 'எல் நினோ'வின் தாக்கத்தால் கடல் நீரின் வெப்பநிலை அதிகரிப்பது, ஆப்பிரிக்க மற்றும் ஆசியக் கண்டங்கள் முழுவதும் தீவிரமான கோடைக்காலச் சூழல்களை உருவாக்கி வருகிறது.

(iii) வெப்பத்தாக்கம் (Heat Stroke) மற்றும் உடல்நலம் தொடர்பான உண்மைகள்

- வெப்பத்தாக்கம் என்பது முதியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் மிகவும் ஆபத்தான ஒன்றாகும்; சில சமயங்களில் இது உயிரிழப்பைக்கூட ஏற்படுத்தக்கூடும்.
- அதிகப்படியான வெப்பநிலை மயக்கம் மற்றும் கடுமையான நீர்ச்சத்துக் குறைபாட்டிற்கு (dehydration) வழிவகுக்கிறது.
- இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் வெப்பத்தாக்கத்தினால் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகப் புள்ளிவிவரத் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.
- தீவிரமான வெப்ப அலைகள் வீசும் காலங்களில், முதியவர்களுக்கும் இதய பலவீனம் உள்ளவர்களுக்கும் மாரடைப்பு ஏற்படும் அபாயம் கணிசமாக அதிகரிக்கிறது.

(iv) கடும் கோடைக்காலத்தின் தாக்கம்

- இந்தத் தீவிர வெப்பம், இந்தியாவில் விவசாயத்தையே வாழ்வாதாரமாக நம்பியுள்ள 123 கோடி மக்களின் வாழ்வாதாரத்திற்கு நேரடி அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.
- விவசாய உற்பத்தி வீழ்ச்சி:
- 2022-ஆம் ஆண்டில் ஏற்பட்ட இதேபோன்ற ஒரு வெப்ப அலை காரணமாக, கோதுமை விளைச்சல் 34% வரையிலும், காய்கறி உற்பத்தி 50% வரையிலும் வீழ்ச்சியடைந்தது.
- தற்போதைய வெப்ப அலை, அரிசி மற்றும் கோதுமை உற்பத்தியிலும், பிற அத்தியாவசியப் பயிர்களின் உற்பத்தியிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- வெப்பநிலை அதிகரிப்பதன் காரணமாகப் பால் உற்பத்தி கணிசமாகக் குறைகிறது; மேலும் இது கால்நடைகள், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் காடுகளின் இருப்பிற்கும் அச்சுறுத்தலாக அமைகிறது.
- பிரேசிலில் சோயாபீன் உற்பத்தியில் ஏற்பட்ட 10% வீழ்ச்சியையும், பரவலாக ஏற்பட்ட காட்டுத் தீக்களையும், இந்தியா எதிர்கொள்ளக்கூடிய சவால்களுக்கான எச்சரிக்கைகளாக நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(v) எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகள்

- மாநில அளவிலான நடவடிக்கை (கேரளா): காலை 11:00 மணி முதல் பிற்பகல் 3:00 மணி வரை பொதுமக்கள் வெளியே செல்வதைத் தவிர்க்குமாறு கேரள அரசு அறிவுறுத்தியுள்ளது; மேலும், அதிகபட்ச வெப்பம் நிலவும் நேரங்களில் மக்கள்

தாங்களாகவே முன்வந்து கடைப்பிடிக்கும் ஒரு "சுய ஊரடங்கை" (self-curfew) முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

- அரசு சார்ந்த அடிப்படை வசதிகள்:
- ஒவ்வொரு தெருவிலும் குடிநீர் வழங்கும் மையங்கள் (பந்தல்கள்) அமைக்கப்பட வேண்டும்.
- இயற்கையான மர நிழல் இல்லாத பகுதிகளில், பொதுமக்களுக்காகத் தற்காலிக வெப்பத் தங்குமிடங்களை அரசு அமைத்துத் தர வேண்டும்.
- அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் கிளை மையங்கள், வெப்பம் சார்ந்த உடல்நலப் பாதிப்புகளுக்கு உடனடி முதலுதவி அளிக்கும் வகையில் தயார் நிலையில் வைத்திருக்கப்பட வேண்டும்.
- வெப்பத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளப் பொதுமக்களுக்கு உதவும் வகையில், நீர் மற்றும் மோர் வழங்கும் மையங்களை அமைக்குமாறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் (NGOs), அரசியல் கட்சிகளும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- வெப்பத்தின் கடும் தாக்கத்திலிருந்து பயிர்களையும் கால்நடைகளையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதே அரசின் முதன்மையான பொறுப்பாகும்